ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2079/73 - 2018 ජූලි මස 13 වැනි සිකුරාදා - 2018.07.13
*2079/73 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (1அ) ஆம் பிரிவின் கீழ் மஹரகம நகர சபை***
***உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் அதிகாரங்களுக்குட்பட்டு குறித்த கால எல்லைக்குள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை செய்து ஒப்பமிடாமை காரணமாக மஹரகம நகர சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ், மஹரகம நகர சபையின் 08 ஆம் இலக்க தலவதுகொட வட்டாரத்திற்கு நியமனம் செய்யப்பட்ட ரணாதீரகே லக்மாலி தில்ருக்ஷி என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழு இல. 02 இன் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக 8 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவர், உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அந்த சுயேச்சைக் குழுவை சேர்ந்தவருமான மஹரகம நகர சபையின் 08 ஆம் இலக்க தலவதுகொட வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழு இல. 02 இன் குழுத் தலைவரால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஹர்ஷினீ கேமாங்கனீ சேபாலகே என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது மஹரகம நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுது தேவகே சானிக அனுருந்த ரூபசிங்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (1அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஹர்ஷினீ கேமாங்கனீ சேபாலகே என்பவர் மஹரகம நகர சபையின் 08 ஆம் இலக்க தலவதுகொட வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எஸ். டீ. எஸ். ஏ. ரூபசிங்க,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*மஹரகம நகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கொழும்பு,*
*2018, யூலை 12.*

*7 -932*

1A - G 28073 - 17 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*